அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

பழந்தமிழர் வேளாண்மையில் பயன்படுத்திய நுட்பங்கள்

Traditional Agricultural Techniques of Ancient Tamils

Dr Rathika S, *Assistant Professor in Tamil Department, Nazareth college of Arts and Science, Avadi, Thiruvallur District.*

முனைவர் ராதிகா ச, தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர், நாசரேத் கலை மற்றும் அறிவியல்கல்லூரி, ஆவடி-**600062.**

Abstract

This paper examines the significance of agriculture and the scientific farming practices of ancient Tamils based on evidence from Tamil classical literature. Thiruvalluvar regarded agriculture as the noblest of all occupations, and Sangam literature extensively highlights the dignity of farmers and their agricultural knowledge. The study discusses traditional practices such as deep ploughing, repeated tillage, no-till sowing, land leveling, the use of organic manure, water management, seed preservation, weed control, high-yield cultivation, and integrated rice—fish farming, supported by literary references. These practices demonstrate an environmentally sustainable and scientifically informed agricultural tradition that promoted efficient resource utilization and ecological balance. The paper concludes that the agricultural wisdom preserved in ancient Tamil literature remains highly relevant in addressing contemporary challenges such as climate change, sustainable farming, and food security, emphasizing the need to preserve and promote these indigenous agricultural practices.

Keywords: *Agriculture, Sangam Literature, Thirukkural, Organic Farming, Water Management, Sustainable Agriculture.*

ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழர் சமூகத்தில் வேளாண்மையின் சிறப்பையும், அதன் அறிவியல் சார்ந்த வேளாண் முறைகளையும் தமிழ் இலக்கியங்களின் அடிப்படையில் ஆராய்கிறது. திருவள்ளுவர் உழவுத் தொழிலை உயர்ந்த தொழிலாகக் குறிப்பிட்டதுடன், சங்க இலக்கியங்களும் உழவர்களின் பெருமை மற்றும் வேளாண் அறிவை விரிவாகப் பதிவு செய்துள்ளன. ஆழ உழவு, பலசால் உழவு, உழாமலேயே விதைத்தல், நிலத்தைச் சமன்படுத்துதல், இயற்கை உரங்களின் பயன்பாடு, நீர் மேலாண்மை, விதை பாதுகாப்பு, களைக் கட்டுப்பாடு, அதிக விளைச்சல் மற்றும்

நெல் வயல்களில் மீன் வளர்ப்பு போன்ற நிலைத்த வேளாண் நடைமுறைகள் இலக்கியச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது. இம்முறைகள் சுற்றுச்சூழலுக்கு உகந்த, வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும், அறிவியல் அடிப்படையிலான வேளாண் மரபை வெளிப்படுத்துகின்றன. இன்றைய காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற சவால்களுக்கு, பண்டைய தமிழர் வேளாண் அறிவு சிறந்த வழிகாட்டுதலாக அமைகிறது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

திறவுச் சொற்கள்: வேளாண்மை, சங்க இலக்கியம், திருக்குறள், இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை, நிலைத்த வளர்ச்சி.

முன்னுரை

மனித வரலாற்றில் விவசாயம் மிகவும் பழமையான மற்றும் மிக முக்கியமான தொழில்களில் ஒன்றாகும். இது மனிதர்களை இயற்கையுடன் இணைக்கிறது, நமது கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிக்கிறது. விவசாயம் இல்லாமல், நிலையான நாகரிகம் இருந்திருக்காது, வளங்கள் ஏராளமாக இருந்திருக்காது என்பதை உறுதியாக சொல்லலாம்.உழவர் அல்லாத பிறர் அனைவரும் உழவரை வணங்கி அவர் அளிக்கும் உணவை உண்டு அவர் பின்னால் செல்லும் அடிமையர் என்று வள்ளுவர் கூறியுள்ளார்.இதனை,

> **“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
>
> **தொழுதுண்டு பின்செல் பவர்” (குறள் - 1033)**

எனும் குறலில் கூறியுள்ளார். திருவள்ளுவர் காலத்தில் மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்து வந்தனர் எனினும் தொழில்கள் யாவற்றிலும் உழவுத் தொழிலே சிறந்தது என்று காட்டும் நோக்கத்தில் வள்ளுவர் **உழவு** எனும் அதிகாரத்தையே எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கியங்களில் பரவலாக உழவுத் தொழிலின் மேன்மையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதனை பற்றிக் இக்கட்டுரைகள் காண்போம்.

உழும் முறைகள்

அகல உழுவதை விட ஆழ உழுவதே சிறந்தது. உழும் முறையினை ஒருசால் உழவு (ஒருமுறை உழுவது), இருசால் உழவு (இருமுறை உழுவது) மற்றும் பலசால் அல்லது செஞ்சால் உழவு(பலமுறை உழுவதை) என்று கூறியுள்ளனர்.

நன்கு உழக்கூடிய எருதுகளை நுகத்தில் (நுகம் என்பது பொதுவாக இரண்டு எருதுகள் போன்ற விலங்குகளை ஒன்றாக இழுக்க உதவும் மரத்தால் ஆன ஒரு சாதனம்) பூட்டி கலப்பையில்

(மண்ணைத் திருப்புவதற்கும், உழுவதற்கும், விதைப்பதற்கும், மென்மையாக்குவதற்கும் பயன்படும் ஒரு வேளாண் கருவி) உள்ள கொழு (மண்ணைப் பண்படுத்தும் கருவி) முழுவதும் நன்றாக மண்ணில் அழுந்தும்படியாக செய்து பலசால் உழவு செய்வர்.இதனை,

"குடி நிறை வல்சிச் செஞ்சால் உழவர்

நடை நவில் பெரும் பகடு புதவில் பூட்டி

பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்

உடுப்பு முகமுழுக் கொழு மூழ்க ஊன்றி"(பெரும்.197-200) என்பர்.அதாவது உழவு செய்கின்ற உழவர்கள், உழவில் பழக்கிய எருதுகளை ஏரில் பூட்டி யானையின் வாயை ஒத்த கலப்பையை கொழு நிலத்தில் அழுந்துமாறு பலசால் உழுது பயிருட்டு மீண்டும் உழுது களையெடுத்த புன்செய் நிலம் என கூறப்பட்டுள்ளது. பலமுறை உழுத நிலத்தில் மழை நீர் எளிதில் ஊறும் மண்ணும் நெகிழ்வுத் தன்மையுடன் காணப்படும். இதனை,

"தண் துளிக்கு ஏற்ற பல உழு செஞ் செய்

மண் போல் நெகிழ்ந்து, அவற் கலுழ்ந்தே" அகம்.26 (24-25)

என்ற வரிகளில் மூலம் அறிய முடிகிறது.

உழாமலேயே விதைக்கும் முறை

உழுது விதைக்கும் முறைப் போன்றே உழாமலேயே விதைக்கும் முறையும் மலைப்பகுதியில் வாழும் குறவர் இன மக்களிடம் காணப்பட்டுள்ளது. மழைநீரைச் சேர்த்து வைத்து வேளாண்மை செய்ய வேண்டிய நிலை குறிஞ்சி நிலத்தில் இல்லை. ஏனென்றால், அவர்களுக்கு அருவி நீரும், சுனை நீரும் எப்போதும் குறைவின்றிக் கிடைக்கும். குறிஞ்சி நில மக்கள் இதைக் கொண்டு உழாமலேயே வேளாண்மை செய்துள்ளனர். இதை,

" கடுங் கண் கேழல் உழுத பூழி,

நல் நாள் வரு பதம் நோக்கி, குறவர்

உழாஅது வித்திய பரூஉக் குரல் சிறு தினை" (புறம்.168 4-6)

என்பர்.அதாவது,காட்டுப் பன்றிக் குடும்பம் அங்குள்ள காந்தள் கிழங்குகளைக் தோண்டி உண்ணும். அவை தோண்டிய பகுதியில் அங்கு வாழும் குறவர் இனமக்கள் தினையை உழாமலேயே விதைத்துள்ளனர். அவையும் நன்கு வளரும்.

சமன் செய்தல்

பரம்பு மற்றும் தளம்பு என்னும் கருவிகளைக் கொண்டு வயலில் உள்ள மேடு பள்ளங்களைச் சமன்படுத்தப்படுகிறது. இதனை பரம்படித்தல், தளம்படித்தல் என்று கூறுவர். பல் போன்ற அமைப்பினையுடைய கருவிகளை கொழு போன்று கலப்பையில் கட்டி உழுவதின் மூலமாகவும், மண் கட்டிகள் உடைந்து நிலம் சமன்படுத்தப்படுகிறது இதற்கு ¨ **பல்லி ஆடுதல்** ¨ என்று பெயர்.

வேளாண்மையில் பயன்படுத்திய உரங்கள்

வயல்களில் இலை தழைகள் ஆடு, மாடுகளில் சாணங்களைப் போட்டு நீர் விட்டு காயவிட்டுள்ளனர். அவையே மக்கி உரமாக மாறியுள்ளது. பயிரின் வேர்கள் மற்றும் அங்கு வாழ்கின்ற நுண்ணுயிர்களுக்கு இடையூறு இல்லாமல் பிராணவாயு மற்றும் நீர் கிடைக்க வேண்டும். மண்ணில் இவ்வகையான சுகாதார சூழல் ஏற்படும் போது தான் பயிருக்கு தேவையான அனைத்து சத்துக்களும் நுண்ணுயிர்களின் மூலம் மண்ணில் மாற்றப்பட்டு அவர்கள் மூலம் பயிர்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது பயிர்களும் அதிக மகசூளை கொடுக்கும். மேலும், சத்துள்ள பயிராகவும் மக்களுக்கு கிடைக்கும்.

கால்நடைகளின் மக்கிய கழிவினை **“தாதொரு மற்றும் எரு”** என்று இலக்கியங்களில் கையாளப்படுகிறது. ˙எரு˙ என்றால் ˙உலர்ந்த சாணம்˙ என்று பொருள்.

¨ ***காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்துத்*** ¨ ***(கலி.108 60)***

¨ ***முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து***

எருவினுண்——------ ¨ ***(குறுந்.46 3)***

இவ்வரிகளில் மூலம் சாணமானது (மன்றம் என்றால் பொதுவான இடம்) பொதுவான இடங்களில் போடப்படுகிறது என்பதை அறியலாம்.

இவை அல்லாமல் தெருக்களிலும் சாணம் தெளித்துள்ளனர். இதனை,

“தாது எரு மறுகின் மூதூர் ஆங்கண் ¨ ***(அகம். 165 4)***

என்ற வரியின் மூலம் அறிய முடிகிறது.

உழவர்கள் நிலத்தை உழுது பதப்படுத்தினால், எரு இட்டு உழவு செய்ய வேண்டியதில்லை என்கிறார் திருவள்ளுவர். இதை,

“தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்"(குறள்.1037)

என்ற குறலில் கூறியுள்ளார்.

நீர் மேலாண்மை

'**பதார்த்த சிந்தாமணி**' என்ற இலக்கிய நூலில் நீரின் தன்மையைப் பொறுத்து அந்த நீரில் விளையும் தாவரங்கள் பயிர்கள் ஆகியவற்றின் மருத்துவ குணங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் நிர்ணயிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. எனவே நீரின் பங்களிப்பு வேளாண்மையில் மிகவும் இன்றியமையாததாகும்.புன்செய் நிலங்களில் நீரில்லாமல் விளைச்சனைக் காண முடியாது. இதை,

"வித்தி வான் நோக்கும் புன் புலம் கண்" (புறம்.18 24)

என்ற வரிகளில் விதைத்துவிட்டு வான்மழையை எதிர்நோக்கும் நிலம் புன்செய் நிலம் எனக் கூறப்பட்டுள்ளது. மழை பெய்யவில்லை என்றாலும் அக்காலத்தில் உழவர்கள் தங்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். இதனை,

"பெய்யினும் பெய்யா தாயினும் அருவி

கொள்ளுழு வியன்புலத்து உழைகால் ஆக,

மால்புடை நெடுவரைக் கோடுதொறு இழிதரும்

நீரினும் இனிய சாயல்

பாரி வேள்பால் பாடினை செலினே" (புறம்.105 4-8)

என்ற பாடலில் மூலம் அறிய முடிகிறது.மேகங்கள் மோதுகின்ற நெடிய பறம்பு மலையின் சிகரங்களிலிருந்து வரும் அருவிகளின் நீர், கொள் விளைப்பதற்காக உழுத வயல்களில் வாய்க்காலாக ஓடி வருகிறது. குளத்தின் கீழுள்ள வயல்களில் புகுந்து, நெல் வளர உதவியுள்ளது.

நீரைத் தேக்கி வைக்கும் குளங்கள் பிறை வடிவில் அமைந்துள்ளது. இதை,

"எண் நாள் திங்கள் அனைய கொடுங் கரைத்

தெள் நீர்ச் சிறு குளம் கீள்வது மாதோ" (புறம்.118 2-3)

என்ற வரிகள் மூலம் அறியலாம். தெளிந்த நீரை உடைய குளம் ஒன்று இருந்தது. அதனைச் '**சிறுகுளம்**' என அழைத்துனர். எட்டுநாள் வளர்ந்த பிறைநிலா காணப்படுவது போல அதன் தோற்றம் இருந்துள்ளது.

நீர் தேக்கங்கள் வளைவாக அமைக்கும்போது நீரின் வேகம் கட்டுப்படுத்தப்படுகிறது. வேளாண்மைக்கு தொடர்ந்து சேதம் ஏற்படுத்தி வந்த காவிரிக்கு முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கரிகால் வளவன் அணையைக் கட்டினான். மரம் நடுவது, குளம் வெட்டுவது மற்றும் கால்நடைக்காக மருத்துவமனை ஏற்படுத்துவது போன்ற செயல்களையெல்லாம் இம்மன்னன் வேளாண்மைக்காகச் செய்துள்ளார்.

விதை நுட்பம்

நெல் வகைகள் பருவ நிலைக்கு ஏற்றார் போல பயிரிடப்படும் மண்ணின் கார அமில தன்மையை பொறுத்து பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.நெல்லை தனியாக பிரித்து எடுக்காமல் கதிரோடு காயவைத்து அதனை விதையாகப் பயன்படுத்தியுள்ளனர். விதையின் பயனை அறியாத சில உழவர்கள் அதனையே உணவாக கொண்டும் வாழ்ந்துள்ளனர் என்பதனை,

"வீழ் குடி உழவன் வித்து உண்டாஅங்கு" (புறம்.230 13)

என்ற வரிகள் கூறுகிறது.விருந்தினர்களுக்கு உணவு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும் போது உணவிற்காக வயலில் விதை நெல்லிற்காக வைத்திருக்கும் உலரி விதைகளைப் பயன்படுத்தி விருந்து சமைத்துள்ளனர் நம் முன்னோர்கள். இதை,

"குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து" (புறம்.333 12)

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது.

களைக்கட்டுப்பாடு

களைகள் எந்த பருவத்திலும் எப்போது வேண்டுமானாலும் முளைத்து வருவதற்கு விதைகளில் உயிர்ப்புத்தன்மையே முக்கிய காரணமாக அமையும். களைகளை உட்கொள்ளும் மாடுகளிலிருந்து வெளிவரும் சாணத்தில் விதைகள் காணப்பட்டாலும் அவை குறுகிய காலத்திலே தம்முடைய முளைப்பினைத் தொடங்குகிறது. சாணத்தை நன்கு மக்க விடுவதால் இயல்பாகவே களைகள் மற்றும் விதைகள் உயிர்ப்பு தன்மையை இழந்து விடுகின்றன.

"**களை பிடுங்காப் பயிர் கால் பெயர்**" என்பது முன்னோர் வாக்கு. நன்செய் நிலத்தில் கைகளாலும் புன்செய் நிலங்களில் களைக்கொத்தாலும் களை எடுப்பர். இம்முறை களையைக் கட்டுப்படுத்துமே தவிர முழுமையாக அழிக்கப்படுவதில்லை.

வயலில் அறுவடை முடிந்த பிறகும் எருதுகளை கட்டி உழுதுள்ளனர். இதன் மூலம் களைகள் வளர்ச்சி தடைப்படும். இதனை,

“நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் புகுத்து,

குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர,

அரிகால் போழ்ந்த தெரி பகட்டு உழவர் (அகம்.41 4-6)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மழைக்காலத்தில் களைகள் அதிகமாக வளரும். அதனால் பயிர் வளரும் போதே இடையில் களையை வெட்டி எறிவதும் உண்டு. இதனை,

“கார்ப் பெயல் கலித்த பெரும் பாட்டு ஈரத்து,

பூழி மயங்கப் பல உழுது, வித்தி,

பல்லி ஆடிய பல் கிளைச் செவ்விக்

களை கால் கழாலின், தோடு ஒலிபு நந்தி” (புறம்.120 2-5)

என்ற பாடல் வரிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம். இப்பாடலில் பயிராக வளரும்போது இடையே முளைக்கும் பல்லிச் செடிகளைக் களைந்து எறிவர். இதனால் வரகு செழித்து வளரும் எனக் கூறப்பட்டுள்ளது.களையை அடியோடு அழிக்க ஆழ உழுவதும் சிறந்த முறையாகும். கார்காலத்தை விட கோடை காலத்தில் களைகள் குறைவாக வளரும். எனவே, கோடை உழவு செய்வது ஒரு சிறந்த உழவு முறை என்பர்.

வேளாண்மையில் விளைச்சல்

வேளாண்மையில் உழவர்களின் உழைப்பிற்கேற்ப விளைச்சலும் அவர்களுக்கு கிடைத்துள்ளது. வேளாண்மை பல்வேறு இடங்களில் பரவலாக செய்யப்பட்டாலும் சோழ நாட்டில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதுள்ளதாக பாடல்கள் மற்றும் பழமொழிகளின் மூலம் அறிய முடிகிறது.

¨ஒரு பிடி படியும் சீறிடம்

எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே!¨ (புறம்.40 10-11)

என்ற பாடலில் ஒரு யானை படுக்கும் நிலப்பரப்பில் ஏழு யானைகளுக்கு உணவளிக்கும் நெல் விளையும் வளம் மிக்க நாடு சோழநாடு எனக் கூறப்பட்டுள்ளது.¨ **கட்டுக் கலம் காணும்.. கதிர் உழக்கு நெல் காணும்.. சொன்ன பொதி காணும் சோழராஜா சீமையிலே!"** என்ற பாடல்

வரிகள், பொதுவாகத் தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் பழமொழிகளின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றன. '**சோழநாடு சோறுடைத்து**' என்ற வாக்கியமும் இதற்கு பொருந்துவதாக அமைந்துள்ளது.இதன் மூலம் சோழர் காலத்தில் விவசாயம் செழித்து, நெல் நிறைந்து, வளமாக இருந்ததை அறிய முடிகிறது.

நெல் வயல்களில் மீன் வளர்ப்பு

நெல் வயல்களில் மீன் வளர்ப்பும் பண்டைய தமிழரின் வேளாண்மையில் இருந்துள்ளது. இதனை,

"ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயல் உகள" (திருப்பாவை 3ம் பாடல்.4)

என்ற ஆண்டாளின் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. செந்நெல் விளைந்துள்ள வயல்களில் மீன்கள் துள்ளி விளையாடி இருந்ததாக கூறப்பட்டுள்ளது. இதேப் போல குலசேகர ஆழ்வார் அவர்களின் பாடலிலும் காண முடிகிறது

"மீன் நோக்கும் நீள் வயல் சூழ் வித்துவக்கோட்டு அம்மா" (பெருமாள் திருமொழி.ஐந்தாம் திருமொழி 690.1)

மீன்கள் நிறைந்த நெடிய வயல்களால் சூழப்பட்ட வித்துவக்கோட்டில் வாழும் பெருமாளே என்று கூறுகிறார்.

மீன்கள் வயல்களில் வளர்க்கப்பட்டுள்ளது அந்நிலை தண்ணீர் பஞ்சம் காரணமாக மாறி உள்ளது.மீனின் கழிவுகள் பயிர்களுக்கு உரமாகிறது. பயிர்களில் உள்ள தேவையற்ற களைகள் மீன்களுக்கு உணவாகிறது.இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும் விவசாயியின் குடும்பத்திற்கு தேவையான ஊட்டச்சத்தும் கிடைத்துள்ளது.

முடிவுரை

மனித உயிர்வாழ்வு மற்றும் தேசிய வளர்ச்சிக்கு விவசாயம் தொடர்ந்து மைல் கல்லாக உள்ளது. காலநிலை மாற்றம், மோசமான சந்தை விலைகள் இவற்றில் அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் போன்ற சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டாலும், அவர்களின் பங்களிப்பு ஈடுசெய்ய முடியாதது. விவசாயத்தைப் பாதுகாக்கவும் வலுப்படுத்தவும், சமூகமும் அரசாங்கமும் விவசாயிகளுக்கு சிறந்த ஆதரவு, தொழில்நுட்பம் மற்றும் நியாயமான வருமானத்தை வழங்க வேண்டும். விவசாயிகள் செழிக்கும்போது, நாடு செழிக்கும். எனவே, விவசாயத்தை மதிப்பதும், விவசாயிகளை போற்றுவதும் நாம் ஒவ்வொருவரின் கடமையாக கொள்ள வேண்டும்.

துணைநூற் பட்டியல்

1. **அகநானூறு**. வ.த. இராமசுப்பிரமணியம் (உரை). முதல் பதிப்பு, ஜூலை 2009. சென்னை: திருமகள் நிலையம், வெங்கட நாராயண சாலை, தி. நகர், சென்னை — 17.

2. **கலித்தொகை (மூலமும் உரையும்)**. புலியூர் கேசிகன் (உரை). முதல் பதிப்பு, அக்டோபர் 2009. சென்னை: சாரதா பதிப்பகம், சென்னை — 14.

3. **குறுந்தொகை தெளிவுரை**. புலியூர் கேசிகன் (உரை). மறு பதிப்பு, 2008. சென்னை: பாரி நிலையம், பிராட்வே, சென்னை — 18.

4. **சங்க இலக்கியங்கள்: மூலமும் உரையும்**. தொகுதி — 14, **பத்துப்பாட்டு (முதல் தொகுதி)**. சென்னை: வர்த்தமானன் பதிப்பகம், இராமகிருஷ்ண தெரு, தி. நகர், சென்னை — 17.

5. **ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம் (உரையுடன்)**. திரு. இராமசுப்பிரமணிய சாமா மற்றும் திருமதி ஆர். பொன்னம்மாள் (உரை). ஐந்தாம் பதிப்பு, மார்ச் 2012. சென்னை: கங்கைப் புத்தக நிலையம், தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17.

6. **புறநானூறு தெளிவுரை**. புலியூர் கேசிகன் (உரை). மறு பதிப்பு, 2007. சென்னை: பாரி நிலையம், பிராட்வே, சென்னை — 18.

7. **திருக்குறள்**. வித்துவான் டாக்டர் எம். நாராயண வேலுப் பிள்ளை (உரை). ஜனவரி 2020. சென்னை: நர்மதா பதிப்பகம், பாண்டி பஜார், தி. நகர், சென்னை — 17.

8. **பெருமாள் திருமொழி**. இரா. பரஞ்சோதி (உரை). மூன்றாம் பதிப்பு, மே 2009. சென்னை: சகுந்தலை நிலையம், மண்ணடி, சென்னை — 1.

Bibliography

1. *Akanānūru — Edited by V. T. Ramasubramaniam. First Edition, July* **2009.** *Thirumagal Nilayam, Venkata Narayana Road, T. Nagar, Chennai* — **600017.**

2. *Kalithogai (Text and Commentary) — Puliyur Kesavan. First Edition, October* **2009.** *Saradha Publications, Chennai* — **600014.**

3. *Kurunthogai: Detailed Commentary — Puliyur Kesigan. Reprint,* **2008.** *Pari Nilayam, Broadway, Chennai* — **600018.**

4. *Sangam Literature: Text and Commentary, Volume 14 — Pattuppāṭṭu (Part I). Varthamanan Publications, Ramakrishna Street, T. Nagar, Chennai — 600017.*

5. *Sri Nālāyira Divya Prabandham (with Commentary) — Tiru Ramasubramania Samaa and Mrs. R. Ponnammal. Fifth Edition, March 2012. Ganga Book Stall, Deenadayalu Street, T. Nagar, Chennai — 600017.*

6. *Puranānūru: Detailed Commentary — Puliyur Kesigan. Reprint, 2007. Pari Nilayam, Broadway, Chennai — 600018.*

7. *Thirukkural — Vidwan Dr. M. Narayana Velu Pillai. January 2020. Narmadha Publications, Pondy Bazaar, T. Nagar, Chennai — 600017.*

8. *Perumal Tirumozhi — R. Paranjothi. Third Edition, May 2009. Sakunthala Nilayam, Mannady, Chennai — 600001.*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com